Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN

Calendar                Case No. **STC.70 /2023**
Miscellaneous
Preliminary Register
Deposition of Witness for        PW -  1 (LW- 1  )        /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகேந்திரன் | Husband  Name | : | கணேசன் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of JUNE 2023.

எதிரி ஆஜர் இல்லை.  குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன்.  எனது தரப்பு முதல்  விசாரணை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.  அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.  அதிலுள்ள விபரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 03.10.2022 ம் தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய ரூ.2,00,000/-திற்கு CUB திருவழஞ்சுழி  காசோலையின் அசல் **பு.த.சாஆ.1** ஆகும்.

2) 10.10.2022 ம் தேதியிட்ட எதிரி எனக்கு வழங்கிய ரூ.2,00,000/-திற்கு CUB திருவழஞ்சுழி  காசோலையின் அசல் **பு.த.சாஆ.2** ஆகும்.

3) 03.10.2022 ம் தேதியிட்ட எனது வங்கி கணக்கில் நான் ரூ.2,00,000/- செலுத்தியதற்கான ரசீதின் அசல் **பு.த.சாஆ.3** ஆகும்.

4) 10.10.2022 ம் தேதியிட்ட எனது வங்கி கணக்கில் நான் ரூ.2,00,000/- செலுத்தியதற்கான ரசீதின் அசல் **பு.த.சாஆ.4** ஆகும்.

5) 12.10.2022 ம் தேதியிட்ட எனது TN Mercantile Bank கோவிந்தக்குடி கிளை வங்கி கணக்கில் காசோலை Funds Insufficient என்று குறிப்பிடப்பட்டு கொடுக்கப்பட்ட ரசீதின் அசல் **பு.த.சாஆ.5** ஆகும்.

6) 12.10.2022 ம் தேதியிட்ட எனது TN Mercantile Bank கோவிந்தக்குடி கிளை வங்கி கணக்கில் 2 வது காசோலை Funds Insufficient என்று குறிப்பிடப்பட்டு கொடுக்கப்பட்ட ரசீதின் அசல் **பு.த.சாஆ.6** ஆகும்.

7) 25.10.2022 ம் தேதி நான் எனது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பிய அலுவலக அறிவிப்பின் அலுவலக நகல் **பு.த.சாஆ.7** ஆகும்.

8) எதிரி மேற்படி அறிவிப்பினை 27.10.2022 ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் **பு.த.சாஆ.8** ஆகும்.

9) 25.10.2022 ம் தேதியிட்ட புகார்தாரரின் வங்கி கணக்கில் கணக்கு குறிப்புகளின் கணினி நகல் **பு.த.சாஆ.9** ஆகும்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.